செ.ந.வெ. எண்: 580 13.09.2007

## செய்திக் குறிப்பு

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் (செப்டம்பர் 15) மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளில் (செப்டம்பர் 17) கல்லூரி மாணவர்களுக்கும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளைத் தமிழ்நாடு முழுவதும் தமிழ் வளர்ச்சித் துறை நடத்துகிறது.

மாவட்டத் தலைநகரங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன. போட்டிகள் நடைபெறும் இடம், நேரம் பற்றிய தகவல்கள் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் கல்லூரி முதல்வர்கள் வழி மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பள்ளியும் கல்லூரியும் ஒவ்வொரு போட்டிக்கும் மூன்று பேர் வரை மாணவர்களை அனுப்பலாம். பள்ளித் தலைமையாசிரியர் அல்லது கல்லூரி முதல்வரிடமிருந்து ஆளறி சான்றிதழ் பெற்று மாணவர்கள் கலந்து கொள்ளலாம். போட்டிகளின் முடிவுகள் அன்றே அறிவிக்கப்படும். கவிதை கட்டுரை பேச்சுப் போட்டிக்கான தலைப்புகள் போட்டி நடைபெறும் இடத்தில் தெரிவிக்கப்படும். மாவட்டப் போட்டிகள் ஒவ்வொன்றிலும் வெற்றிபெறும் பள்ளி மாணவர்களுக்கு முதல்பரிசு ரூ.1000, இரண்டாம் பரிசு ரூ.500 என்று மாவட்டத்திற்கு 6 பரிசுகளாக முப்பது மாவட்டங்களுக்கும் 180 பரிசுகள் வழங்கப்படவுள்ளன. கல்லூரி மாணவர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் முதல்பரிசு ரூ.1000/– என்று மாவட்டத்திற்கு மூன்று பரிசுகளாக முப்பது மாவட்டங்களுக்கும் 90 பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

மாவட்டத்தில் வெற்றிபெறும் பள்ளி கல்லூரி மாணவர்களுக்குப் பின்னர் மாநில அளவில் கவிதை கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதல் பரிசு ரூ.5000/-- இரண்டாம் பரிசு ரூ.3000/– மூன்றாம் பரிசு ரூ.2000/– என்று மூன்று பரிசுகள் வீதம் பள்ளி மாணவர்களுக்கு 9 பரிசுகளும் கல்லூரி மாணவர்களுக்கு 9 பரிசுகளுமாக 18 பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்காகத் தமிழ் நாடு அரசு இந்த ஆண்டு 5 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளது.

முனைவர் ம.இராசேந்திரன் 13/9
தமிழ் வளர்ச்சி இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.